**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 12/2024 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜஸ்ரீ | த–பெ | ரமேஷ்ராஜன் |
| ஊர்: | : | தேவகோட்டை | சமயம்: | |
| வயது: | : | 27/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கிளை மேலாளர், இந்தியன் வங்கி, சருகணி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2025**
---------------------------------------------------------------------------------------------

**25.03.2025**

**முதல் விசாரணை :**

1)எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. மேற்படி அழைப்பாணையில் விக்னேஷ் என்பவரின் வங்கி கணக்கின் மே 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான கணக்கு பட்டியல் தாக்கல் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி **வங்கி கணக்கு பட்டியல் ம.சா.ஆ. 6 ஆகும்.** மேற்படி காலக்கட்டத்தில் மேற்படி நபரின் வங்கி கணக்கில் எப்போதும் ரூ. 10 லட்சம் இருப்பு இருந்ததில்லை.

**குறுக்கு விசாரணை**

மேற்படி ம.சா.ஆ. 6 ஆவணத்தில் அதிகபட்சமாக எவ்வளவு தொகை எந்த தேதியில் இருந்துள்ளது என்றால் 26.06.2023 ல் ரூ. 45 ஆயிரத்து 105 அதிகபட்சமாக இருப்பு இருந்துள்ளது. பின்னர் அதனையும் வாடிக்கையாளர் எடுத்துள்ளார். 26.07.2023 மற்றும் 27.07.2023 ல் எவ்வித காசோலையும் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு திருப்பட்டுள்ளதாக காணப்படவில்லை. 01.05.2023 முதல் செப்டம்பர் 2023 வரை எந்த காசோலையும் வசூலுக்குதாக்கல் செய்யப்பட்டு திருப்பப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணம் எங்கள் வங்கியில் வழங்கப்பட்டதில்லை. அரியக்குடி யுகோ வங்கியில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**<u>மறு விசாரணை</u>**

1) வழக்கு காசோலை CTS காசோலை ஆகும். மேற்படி காசோலை CTS முறையில் கிளியரிங்க்காக அனுப்பப்பட்டுள்ளது எனவே எங்கள் வங்கிக்கு மேற்படி காசோலை வராது. அதன் காரணமாக வாடிக்கையாளரின் வங்கி கணக்கில் பதிவுகள் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) பொதுவாக வங்கி கணக்கில் பணம் செலுத்தப்பட்டாலும், எடுக்கப்பட்டாலும், காசோலை திருப்பப்பட்டாலும், வங்கி கணக்கில் பதிவுகள் ஏற்படும் என்றாலும் மேற்படி விபரம் தெரியாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி